# <u>திருவள்ளூர் நகராட்சி</u>
# <u>சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்</u>

திருத்திய **1920** ம் வருடத்திய தமிழ் நாடு நகராட்சிகள் சட்டம் அட்டவணை **III** விதி **2 (1)** ன் கீழ் திருவள்ளூர் நகர் மன்றத்தின் சாதாரணக் கூட்டம் திருவள்ளுவர் நகர் மன்ற கூடத்தில் **12.01.2023**–ம் தேதி **வியாழக் கிழமை காலை** 10.30 மணிக்கு **திருமதி.பா.உதயமலர் பாண்டியன், நகர்மன்ற தலைவர்** அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்தில் கீழ்கண்ட பொருட்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட முடிவுசெய்யப்பட்டது.

## <u>நகர் மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்</u>

பொருள் எண்:1

இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் நவம்பர் (ம) டிசம்பர் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.327 – அ.கு. மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

பொருள் எண்:2

இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் நவம்பர் (ம) டிசம்பர் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.328 – அ.கு. மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

பொருள் எண்:3

இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் நவம்பர் (ம) டிசம்பர் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.329 – அ.கு. மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

பொருள் எண்:4

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிகழும் பிறப்பு இறப்பு மற்றும் இறந்து பிறந்தவைகளின் விபரங்கள் கணினியில் பதியப்படுகிறது. நவம்பர் (ம) டிசம்பர் 2022–ம் மாதத்தில் கீழ்கண்டவாறு பிறப்பு இறப்பு மற்றும் இறந்து பிறந்தவைகள் விவரங்கள் கணினியில் பதியப்பட்டு உள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| மாதம் | பிறப்பு | | | இறப்பு | | | இறந்து பிறந்தவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| நவம்பர் 2022 | 9 | 11 | 20 | 12 | 7 | 19 | – | – | – |
| டிசம்பர் 2022 | 6 | 11 | 17 | 12 | 9 | 21 | – | – | – |
| மொத்தம் | 15 | 22 | 37 | 24 | 16 | 40 | – | – | – |

**அலுவலக குறிப்பு : -** மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.2967/2014/எச்1)

**தீர்மானம் எண்.330 – அ.கு. மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

பொருள் எண்:5

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினிகள், ஆணையர் அவர்கள் அறையில் உள்ள கணினி மற்றும் எரிவாயு தகனமேடையில் உள்ள CCTV கேமராக்களுக்கு ஆகிய மூன்று இடங்களில் Railwire Fiber Broad Band Services நிறுவனம் மூலம் Internet சேவைகள் பெறப்பட்டு வருகிறது. மேற்படி மூன்று இணைப்புகளுக்கும் மாதந்தோறும் பில்பட்டியல் தொகையினை வழங்க கடந்த **09.05.2022** அன்று நடைபெற்ற நகர்மன்ற கூட்டத்தில் தீர்மானம் எண்.**111** இல் ரூ.**50,000/–**ற்க்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் கடந்த **5** மாதங்களுக்கு உண்டான பில் பட்டியல் தொகை வழங்க ஒதுக்கப்பட்ட ரூ.**50,000/–** பற்றாத நிலையில், கூடுதலான தொகை ரூ.**2600/–**க்கு நகர்மன்ற தலைவர் அவர்களின்

முன்னனுமதி பெற்று Railwire Fiber Broad Band Services நிறுவனத்திற்கு வழங்கவும், மேலும் இனி வரும் நடப்பு நிதியாண்டிற்கு செலுத்த தோராய செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றத்தில் அனுமதி வழங்கலாம்.
2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கூடுதல் தொகை வழங்கிமைக்கு மன்றத்தில் பின்னேற்பு வழங்கலாம்.

(ந.க.எண்.3343/2017/இ1)

**தீர்மானம் எண்.331 – அ.கு. 1 மற்றும் 2 க்கு மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்:6**

**பார்வை :** அரசாணை எண்.260, நாள்.16.12.2022 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை.

*******

பார்வையில் காணும் அரசாணை எண்.260, நாள்.16.12.2022 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நகராட்சி பகுதிகளில் உள்ள கட்டிட அனுமதி வழங்கப்பட்ட கட்டிடங்களுக்கு கட்டிட வரைபட அனுமதி 01.04.2014 முதல் 31.03.2022 வரையிலான காலத்திற்கு (Covid 19 Lockdown Period) அனுமதி வழங்கப்பட்ட கட்டிட வரைபட அனுமதி காலம் அனுமதி வழங்கப்பட்ட நாளிலிருந்து 2 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டு, அவை அரசு நாளிதழில் 16.12.2022 அன்று பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. இவை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.2163/2022/எப்1)

**தீர்மானம் எண்.332 – அ.கு. மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்:7**

இந்நகராட்சியில் சொத்துவரி மற்றும் காலிமனைவரி சீராய்வு 2022 பணி தொடர்ச்சியாக இந்நகர வரிவிதிப்புதாரர்களுக்கு சிறப்பு அறிவிப்பு விநியோகம் செய்ய ஏதுவாக சிறப்பு அறிவிப்பினை அச்சிடுவதற்கு, பணியின் அவசரம் அவசியம் கருதி மூன்று நிறுவனத்திடமிருந்து கீழ்கண்டவாறு விலைப்புள்ளி பெறப்பட்டது. அதன் விவரம்,

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | A4 – Paper (ஒரு பக்கத்திற்கு) விலை ரூ. |
|---|---|---|
| 1 | Maruti Systems, எண்.1, கவி காம்ளெக்ஸ், கே.கே.நகர், திருச்சி. | 3.50/– |
| 2 | Adhavan I Tech P.(L), எண்.4/174, தோப்புக்காரன்காடு, இராஜபாளையம் (போஸ்ட்) சேலம். | 4.00/– |
| 3 | MPAACT Technologies, எண்.50/28, சண்ணதி தெரு, கே.கே.நகர், சென்னை | 3.75/– |

மேற்படி, பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கவும், அதற்குண்டான உத்தேச செலவீனம் ரூ.1.05 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. பொது நிதியிலிருந்து செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1014/2022/அ1)

**தீர்மானம் எண்.333 – அ.கு. 1 மற்றும் 2 க்கு மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்:8**

உதவி ஆணையர், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம், அம்பத்தூர் அவர்களின் செயல்முறை உத்திரவு எண்.TN/RO/AMB/PAC/68182/Recovery/EO/Dn.4/2022, நாள்.28.12.2022 உத்திரவில் இந்நகராட்சியின் அம்மா உணவக பணியாளர்களுக்கு செலுத்தப்படும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (EPF) தொகை 04/2018 முதல் 09/2021

வரையிலான மாதங்களுக்கு காலதாமதமாக செலுத்தப்பட்டதற்கான அபராத தொகையாக ரூ.**65,924**–யினை மத்திய அரசின் தொழிலாளர் வருவாய் வைப்பு நிதி சட்டம் **1952**, Sec 7A, 14B, 7Q–ன்படி இந்நகராட்சி **31.03.2022** அன்று TRRN No.4172203013944 செலுத்தியதற்கான வட்டி தொகை ரூ.**42,897/–**யினை செலுத்திட கோரி செயல்முறை உத்திரவு வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி தொகை ரூ.**42,897/–**யினை EPF அலுவலகம், அம்பத்தூர் அவர்களுக்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. வருங்கால வைப்பு நிதியை செலுத்த போதிய நிதி வசதி இல்லாததால் குறித்த காலத்திற்குள் செலுத்த இயலவில்லை என்பதால் மேற்படி தொகையை செலுத்த மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
3. முன் அனுமதி பெற்று தொகையினை வழங்க பின் ஏற்பு வழங்கலாம்.

**(ந.க.எண்.690/2017/அ1)**

**தீர்மானம் எண்.334 – அ.கு. 1, 2 மற்றும் 3 இணை மன்றத்தில் ஏற்க்கப்பட்டது.**

**பொருள் எண்:9**

திருவள்ளூர் நகராட்சி, பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TN20 CQ 5387 மற்றும் TN20 CQ 1037 ஆகிய இரண்டு LCV வாகனங்களுக்கு தகுதிச்சான்று காலம் பிப்ரவரி **2023–**ல் முடிவடைய இருப்பதால், மேற்படி வாகனத்தினை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் மூலம் பழுது நீக்கம் செய்வதற்கான உத்தேச செலவீனம் ரூ.**2.50** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.3435/2022/எச்1)**

**தீர்மானம் எண்.335 – அ.கு. மன்றத்தில் ஏற்க்கப்பட்டது.**

**பொருள் எண்:10**

திருவள்ளூர் நகராட்சி – பொறியியல் பிரிவில் **2022–2023** ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்த சாதனைகளை நகர்மன்ற தலைவர் அவர்களின் பரிந்துரையின் பேரில் தினசரி தமிழ் நாளிதழ்களில் கீழ்கண்டுள்ள பட்டியலினை பிரசுரம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

| வ. எண். | முக்கிய பணிகளின் விவரம் | எண்கள் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) நிதியின் கீழ் ஜெயின் நகர் பகுதியில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கட்டிடம் அமைக்கும் பணி | 1 | 197.00 |
| 2 | 15–வது நிதிக்குழு மான்யம் Tied Grant மற்றும் Untied Grant 2021 - 2022 | 10 | 130.00 |
| 3 | நமக்கு நாமே திட்டம் 2021 – 2022 | 2 | 8.50 |
| 4 | 15–வது நிதிக்குழு குறிப்பிட்ட மான்யம் (Special Grant) 2021–2022 நிதியின் கீழ் வார்டு எண்.16–ல் நகர்புற சுகாதார நல மையம் (UHWC) கட்டும் பணி. | 1 | 25.00 |
| 5 | கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2022–2023 நிதியின் கீழ் LPG தகன மேடை (LPG Crematorium) நவீன மயமாக்கி பழுது நீக்கம் மேற்கொள்ளும் பணி. | 1 | 42.50 |

| | | | |
|---|---|---|---|
| **பணி துவங்கும் நிலையில் உள்ள திட்டம்** | | | |
| **6** | தூய்மை இந்தியா திட்டம் 2.0 திட்டம் 2022–2023 நிதியின் கீழ் வார்டு எண்.10, திரு.வி.க. பேருந்து நிலையத்தில் ஏற்கனவே உள்ள கழிப்பிடத்தினை இடித்து புதிய பொது கழிப்பிடம் கட்டும் பணி | **1** | **27.50** |
| **7** | தூய்மை இந்தியா திட்டம் 2.0 திட்டம் 2022–2023 நிதியின் கீழ் வார்டு எண்.2, பெரும்பாக்கம் பகுதியில் ஏற்கனவே உள்ள கழிப்பிடத்தினை இடித்து புதிய சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி | **1** | **31.28** |
| **8** | அம்ரூட் திட்டம் 2.0 2021 – 2022 நிதியின் கீழ் ASP நகரில் உள்ள பூங்காவை (நில அளவை எண்.579/2) மேம்படுத்துதல் பணி | **1** | **36.75** |
| **9** | மூலதன மான்ய நிதி (Capital Grant Fund) 2021–2022 நிதியின் கீழ் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மேம்பாடு செய்தல் பணி மற்றும் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து சுத்திகரிக்கப்பட்ட நீர் குழாய் அமைத்து கூவம் ஆற்று பகுதியில் புட்லூர் தடுப்பணை வரை குழாய் அமைக்கும் பணி (Treated Sewage Disposing after the Check Dam) | **1** | **1048.82** |
| | **மொத்தம்** | **19** | **1547.35** |

மேற்படி பட்டியலினை தினசரி நாளிதழ்களான தினத்தந்தி, மாலை தமிழகம், தினகரன் மற்றும் தினமணி ஆகிய தினசரி தமிழ் நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட்டது. மேற்படி நான்கு தமிழ் தினசரி நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட்டமைக்கு உண்டான பில் பட்டியல் தொகை ரூ.90,006/–னை மேற்படி நான்கு பத்திரிக்கைகளின் பில் பட்டியல் படி வழங்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றத்தில் ஒப்புதல் வழங்கலாம்.
2. பட்டியல் தொகையினை பொது நிதியில் இருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.32397/2022/இ1)

**தீர்மானம் எண்.336 – அ.கு. 1 மற்றும் 2 க்கு மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்:11**

இந்நகராட்சியில் உள்ள 1 முதல் 27 வார்டுகளில் மொத்தம் 2852 எண்ணிக்கை காலிமனை வரி விதிப்புகள் உள்ளது. மேற்படி வரி விதிப்புகளை வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளும் போது புதிய சொத்துவரி விதிக்கப்பட்ட கட்டடங்களின் இரத்து செய்யப்படாத பழைய காலிமனை வரி விதிப்புகள் 109 எண்ணிக்கையில் தொகை ரூ.5,28,757/– நிலுவையாக உள்ளது. அவற்றின் விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

எனவே, புதிய சொத்துவரி விதிக்கப்பட்டு பழைய காலிமனை வரி விதிப்புகளை ரத்து செய்யப்படாத 109 எண்ணிக்கை இரட்டை வரி விதிப்புகளை நீக்கம் / வஜா செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

புதிய சொத்துவரி விதிக்கப்பட்டு பழைய காலிமனை வரி விதிப்புகளை ரத்து செய்யப்படாத 109 எண்ணிக்கை இரட்டை வரி விதிப்புகளை நீக்கம் / வஜா செய்ய மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.4134/2022/அ1)

**தீர்மானம் எண்.337 – அ.கு. மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்:12**

திருவள்ளூர் நகராட்சியில் உள்ள 1 முதல் 27 வார்டுகளில் உள்ள குடிநீர் இணைப்புகளுக்கு உண்டான வசூல் பணி மேற்கொள்ளும் போது குடிநீர் இணைப்பு வரிகள் இரட்டை வரி விதிப்புகளாகவும், பழைய கட்டிடங்களை இடிக்கப்பட்ட இடங்களில் உள்ள குடிநீர் வரி இணைப்புகளையும் நீக்காததால், அந்த குடிநீர் வரிகளை வசூல்செய்ய இயலாத நிலையில் உள்ளது. இதனால் கேட்பு பதிவேட்டில் தேவையற்ற கேட்புகள் இடம்பெறும் நிலை ஏற்படுகிறது. எனவே இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 வார்டுகளில் உள்ள குடிநீர் இணைப்பு இரட்டை வரி விதிப்புகளையும் மற்றும் பழைய கட்டிடங்களை இடிக்கப்பட்ட இடங்களில் உள்ள குடிநீர் இணைப்புகளையும் கண்டறிந்து உடன் அக் குடிநீர் வரிவிதிப்புகளை கேட்பு பதிவேட்டில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** மன்றத்தில் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.338 – அ.கு. மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்:13**

திருவள்ளூர் நகராட்சியில் உள்ள 1 முதல் 27 வார்டுகளில் உள்ள பாதாள சாக்கடை இணைப்புகளுக்கு உண்டான வசூல் பணி மேற்கொள்ளும் போது பாதாள சாக்கடை இணைப்பு வரிகள் இரட்டை வரி விதிப்புகளாகவும், பழைய கட்டிடங்களை இடிக்கப்பட்ட இடங்களில் உள்ள பாதாள சாக்கடை வரி இணைப்புகளையும் நீக்காததால், அந்த பாதாள சாக்கடை வரிகளை வசூல்செய்ய இயலாத நிலையில் உள்ளது. இதனால் கேட்பு பதிவேட்டில் தேவையற்ற கேட்புகள் இடம்பெறும் நிலை ஏற்படுகிறது. எனவே இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 வார்டுகளில் உள்ள பாதாள சாக்கடை இணைப்பு இரட்டை வரி விதிப்புகளையும் மற்றும் பழைய கட்டிடங்களை இடிக்கப்பட்ட இடங்களில் உள்ள பாதாள சாக்கடை இணைப்புகளையும் கண்டறிந்து உடன் அந்த பாதாள சாக்கடை வரிவிதிப்புகளை கேட்பு பதிவேட்டில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** மன்றத்தில் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.339 – அ.கு. மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்:14**

இந்நகராட்சி பகுதியில் தற்போது நடைபெற்று வரும் அரசின் முக்கிய திட்டப்பணிகளுக்கு அரசு நிதி பெற விரிவான திட்ட மதிப்பீடு மற்றும் பட்டியல் தயார் செய்யவும், பணிகளை மேற்கொள்ளும் போது மேற்பார்வையிடவும் நகராட்சியில் தொழில் நுட்ப பணியாளர் இல்லாததால் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) தொழில் நுட்ப பணியாளர்கள் இரண்டு பேர், என்.ஜி.ஓ. காலனி பூங்கா மற்றும் புங்கத்தூர் பூங்காவினை பராமரிக்க பணியாளர்கள் தலா ஒருவர், நுங்கம்பாக்கம் உரக்கிடங்கில் காவலர் இரண்டு பேர் (பகல் மற்றும் இரவு பணி), ஜெ.சி.பி வாகனத்திற்கு தற்காலிக ஓட்டுநர் ஒருவர், நகராட்சி ஈப்பு வாகனங்கள் மூன்று, நகர்மன்ற தலைவர் வாகனம், மற்றும் பாப்காட் வண்டிகளுக்கு ஐந்து ஓட்டுநர்கள், நகராட்சியில் கணினி இயக்குபவர் நான்கு பேர் மற்றும் சங்கு இயக்குபவர் ஒருவர் ஆகிய பணியாளர்களை தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் நகராட்சி ஒப்பந்ததாரர் மூலம் பணியாட்களை மூன்று மாதத்திற்கு ரூ.9.90 லட்சம் மதிப்பீட்டில் நியமித்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றத்தில் அனுமதி வழங்கலாம்.
2. ஒப்பந்த தொகையினை பொது நிதியில் இருந்து வழங்க மன்றத்தில் ஒப்புதல் வழங்கலாம்.

**(ந.க.எண்.3439/2022/இ1)**

**தீர்மானம் எண்.340 – அ.கு. 1 மற்றும் 2 க்கு மன்றத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்:15**

இந்நகராட்சிக்கு சொந்தமான வெள்ளியூர் தலைமை நீரேற்று நிலையம், இராஜம்மாள் தேவி பூங்கா நீர் உந்து நிலையத்தில் உள்ள மின்மோட்டார்கள் மற்றும் உள்ளூர் நீரேற்று நிலையத்தில் உள்ள மின் மோட்டார்கள், சிறு மின் விசை குடிநீர் தொட்டி உள்ள மின் மோட்டார்கள் இயக்குவதற்கும், மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் 13 எண்ணிக்கை பராமரிப்பு செய்யவும், ஒப்பந்த அடிப்படையில் நகராட்சி ஒப்பந்ததாரர் மூலம் (Out sourcing)

பணியாட்களை 16 பேர் மூன்று மாதங்களுக்கு ரூ.9.90 லட்சம் மதிப்பீட்டில் நியமித்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றத்தில் அனுமதி வழங்கலாம்.
2. ஒப்பந்த தொகையினை குடிநீர் நிதியில் இருந்து வழங்க மன்றத்தில் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.3439/2022/இ1)

**தீர்மானம் எண்.341 – அ.கு. 1 மற்றும் 2 க்கு மன்றத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்:16

திருவள்ளூர் நகராட்சியின் பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையத்தினை பராமரித்தல் மற்றும் இயக்குதல் பணிக்கு மே 2022 முதல் ஜுலை 2022 வரைக்குமான மூன்று மாதத்திற்கு ரூ.9,75,000/– என ஒப்பந்த தொகை நிர்ணயம் செய்து நகர்மன்ற தீர்மானம் எண்.1544, நாள்.31.12.2021 ல் அனுமதி பெற்று 05.05.2022 ல் ஒப்பந்தப்புள்ளி கோரி 09.05.2022 ல் M/s. Water Technologies நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. நகர்மன்ற தீர்மானம் எண்.194, நாள்.27.07.2022 ல் அனுமதி பெற்றும் மற்றும் நகர்மன்ற தீர்மான எண்.321, நாள்.28.11.2022–ல் நவம்பர் 2022 முதல் ஜனவரி 2023 வரைக்குமான காலத்திற்கு கால நீட்டிப்பு வழங்கி 29.11.2022–ல் பணி உத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி பணிக்காலம் இம்மாதத்துடன் (ஜனவரி 2023) முடிவடைவதால், பிப்ரவரி 2023 முதல் ஏப்ரல் 2023 வரைக்குமான காலத்திற்கு மேற்படி பராமரித்தல் மற்றும் இயக்குதல் பணி மேற்கொண்ட அதே ஒப்பந்ததாரரைக் கொண்டு ஏற்கெனவே அளிக்கப்பட்ட ஒப்பந்த தொகையின் அடிப்படையிலேயே பணியினை மேற்கொள்ள பணிக்காலத்தினை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றத்தில் அனுமதி வழங்கலாம்.
2. ஒப்பந்த தொகையினை குடிநீர் நிதியில் இருந்து வழங்க மன்றத்தில் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.2086/2022/இ1)

**தீர்மானம் எண்.342 – அ.கு. 1 மற்றும் 2 க்கு மன்றத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது.**

பொருள் எண்:17

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.11 கிழக்கு குளக்கரை தெரு பகுதியில் உள்ள Wellness கட்டிடம் கட்டப்பட்ட பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் வாயிற்கதவு (Gate) அமைக்கும் பணி மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்

2) மேற்படி செலவினத்தினை பொது நிதியின் கீழ் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.2397/2022/இ1)

**தீர்மானம் எண்.343 – அ.கு. 1 மற்றும் 2 க்கு மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டது.**

பொருள் எண்:18

இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மைய கட்டிடத்தினை மராமத்து பணி மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்

2) மேற்படி செலவினத்தினை பொது நிதியின் கீழ் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1053/2022/இ1)

**தீர்மானம் எண்.344 – அ.கு. 1 மற்றும் 2 க்கு மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்:19**

இந்நகராட்சிக்கு சொந்தமான திரு.வி.க பேருந்து நிலையத்தில் உள்ள கடைகள் மற்றும் பெரியகுப்பத்தில் உள்ள கடைகள் மராமத்து பணி மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை ரூ.2.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்

2) மேற்படி செலவினத்தினை பொது நிதியின் கீழ் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1053/2022/இ1)

**தீர்மானம் எண்.345 – அ.கு. 1 மற்றும் 2 க்கு மன்றத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**பொருள் எண்:20**

இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தில், திடக்கழிவு மேலாண்மை பணியில் இயங்கி வரும் ஈக்காடு பகுதியில் உள்ள நுண் உர செயலாக்க மையத்தில் (MCC) பழுதடைந்த இரும்பு ஷீட் கூரையினை மாற்றம் செய்யவும், காய் கனிகளை அரைக்கும் அரவை இயந்திரம் உள்ள பகுதியில் பழுதடைந்துள்ளதனை சரி செய்யவும் மற்றும் கட்டிடத்தில் மராமத்து பணி மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்

2) மேற்படி செலவினத்தினை பொது நிதியின் கீழ் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1053/2022/இ1)

**தீர்மானம் எண்.346 – அ.கு. 1 மற்றும் 2 க்கு மன்றத்தில் அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்:21**

இந்நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் உள்ள JCB வண்டி எண் TN20 BJ 7383 வாகனம் பழுதடைந்துள்ளதால், பழுது நீக்கம் செய்ய JCB India Ltd வண்டியின் அங்கீகரிக்கப்பட்ட TRR Automotive நிறுவனம் திருபெரும்புதூர் மூலம் பழுது நீக்கம் செய்ய தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** 1) மன்றம் அனுமதி அளிக்கலாம்

2) மேற்படி செலவினத்தினை பொது நிதியின் கீழ் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.3632 / 2013 / இ1)

**தீர்மானம் எண்.347 – அ.கு. 1 மற்றும் 2 க்கு மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்:22**

இந்நகராட்சி வார்டு எண்.1 பாதாளசாக்கடை கழிவு நீர் குழாய் உடைப்பு ஏற்பட்டுள்ளதால் இதனை சரி செய்யும் பணி மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** 1) மன்றம் அனுமதி அளிக்கலாம்

2) மேற்படி செலவினத்தினை குடிநீர் நிதியின் கீழ் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1053/2022/இ1)

**தீர்மானம் எண்.348 – அ.கு. 1 மற்றும் 2 க்கு மன்றத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்:23**

இந்நகராட்சி தற்போது ஈக்காடு பகுதியில் உள்ள உரக்கிடங்கும், நுங்கம்பாக்கம் பகுதியில் ஒரு உரக்கிடங்கும் இயங்கி வருகிறது. மேலும் பாதாள சாக்கடை செயல்படுவதாலும், குடிநீர் பணிக்காகவும் கூடுதலாக ஒரு JCB வாகனம் தேவைப்படுவதால், புதியதாக ஒரு JCB வாகனம் ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்க, அரசு திட்ட நிதியில் நிதி ஒதுக்கீடு செய்ய கோரி

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** **1)** மன்றம் அனுமதி அளிக்கலாம்

2) அரசு திட்ட நிதியில் ஒதுக்கீடு செய்ய கோரி அரசுக்கு பிரேரணை அனுப்ப மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்

(ந.க.எண்.3490/2022/இ1)

**தீர்மானம் எண்.349 – .கு. 1 மற்றும் 2 க்கு மன்றத்தில் அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்:24**

இந்நகராட்சி வார்டு எண்.20–ல் உள்ள என்.ஜி.ஜி.ஒ காலனி நகராட்சி நடுநிலைப்பள்ளியினை பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** **1)** மன்றம் அனுமதி அளிக்கலாம்

2) மேற்படி செலவினத்தினை கல்வி நிதியின் கீழ் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1053/2022/இ1)

**தீர்மானம் எண்.350 – .கு. 1 மற்றும் 2 க்கு மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்:25**

திருவள்ளூர் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப்பணியினை ஒப்பந்த அடிப்படையில் ஒப்படைப்புச்செய்து, இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் கடித ந.க.எண்.34458/2013வஅ2 நாள் 17.11.2016–ல், 2016–17 முதல் ஆண்டிற்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.80.82 இலட்சத்திற்கும், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு முறையே 5% கூடுதல் தொகை சேர்த்து, இரண்டாம் ஆண்டான 2017–18 ஆண்டிற்கு மதிப்பீட்டுத்தொகை ரூ.84.86 லட்சத்திற்கும் மற்றும் மூன்றாம் ஆண்டான 2018–19 ஆம் ஆண்டிற்கு மதிப்பீட்டுத்தொகை ரூ.89.10 இலட்சம் மதிப்பீட்டு தொகைகளுக்கும், ஒப்பந்த நமுனாவிற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஒப்புதலை தொடர்ந்து இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப்பணியினை இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மூன்று ஆண்டு காலத்திற்கு மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 01.02.2017 அன்று M/s V.B.ASSOCIATES, சென்னை – 61 நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு தொடர்ந்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 31.01.2020 –ல் மூன்று ஆண்டு காலம் முடிவடைவதால், M/s V.B.ASSOCIATES, சென்னை–61 நிறுவனத்திற்கு ஒப்பந்த நமுனாவில் தெரிவித்துள்ளவாறு அடுத்த மூன்றாம் ஆண்டு மதிப்பீட்டுத்தொகை (2018–19 ஆம் ஆண்டு மதிப்பீடு தொகை) ரூ.89.10 இலட்சம் மதிப்பீட்டில் 5% கூடுதல் தொகை சேர்த்து ரூ.93.55 இலட்சம் மதிப்பீடு தொகையிலும் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கும் மதிப்பீட்டில் 5% கூடுதல் தொகையான ரூ.98.23 இலட்சம் மற்றும் ரூ.103.14 இலட்சம் மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப்பணியினை இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.914 நாள்.31.12.2019–ல் ஒப்புதல் பெறப்பட்டு 03.02.2020–ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் முதல் தொடர்ந்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 31.01.2023 –ல் மூன்று ஆண்டு காலம் முடிவடைவதால், பாதாள சாக்கடை திட்டப்பணியினை இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளும் M/s V.B.ASSOCIATES, சென்னை – 61 நிறுவனம் தொடர்ந்து பணி மேற்கொள்ள அனுமதி கோரியுள்ளது. மேற்படி நிறுவனத்தின் பாதாள சாக்கடை திட்டப்பணியினை இயக்கம் மற்றம் பராமரிப்புப் பணி நல்ல முறையில் செயல்பட்டு வருவதால், M/s V.B.ASSOCIATES, சென்னை–61 நிறுவனத்திற்கு 2022–23 மதிப்பீட்டு தொகையில் ரூ.51.57 இலட்சம் மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப்பணியினை இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள தொடர்ந்து 6 மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. 6 மாதத்திற்கு M/s.V.B.ASSOCIATES, சென்னை-61 நிறுவனத்திற்கு பாதாள சாக்கடை திட்டப்பணியினை இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.
3. மேற்படி செலவினத்தினை 2022-23 (பிப்ரவரி 2023 முதல்), 2023-24 ஆண்டின் வரவு செலவு திட்டத்திலிருந்து குடிநீர் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.2270/2016/இ1)

**தீர்மானம் எண்.351 – அ.கு. 1, 2 மற்றும் 3 க்கு மன்றத்தில் அனுமதி அளிக்கப்பட்டது.**

பொருள் எண் :26

<u>**பார்வை :**</u> தினகரன் நாளிதழ் கடித நாள்.28.12.2022, (நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் முகவரியிட்டது).

******

திருவள்ளூர் நகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கும், கீழ்காணும் அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள எட்டு எண்ணிக்கையிலான பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் ஆண்டு தோறும் பொது தேர்வுக்கு தயாராவது, போட்டி தேர்வுக்கு தயார் செய்வது, மாதிரி வினா விடைகள் வழங்குவது, மாணவர்களின் வாசிப்பு திறனை மேம்படுத்தும் விதமாக பயன்பெறும் வகையில் மாணவர்கள் நலன் கருதி தினகரன் நாளிதழ் தினந்தோறும் பள்ளிகளுக்கு (01.01.2023-31.03.2024 வரையிலான காலத்திற்கு) வழங்க ஆகும் தோராய செலவீனம் ரூ.50000/- ஐ கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | பள்ளிகள் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நகராட்சி துவக்கப்பள்ளி | 2 |
| 2 | நகராட்சி நடுநிலைப்பள்ளி | 4 |
| 3 | நகராட்சி மேல்நிலைப் பள்ளி | 2 |
| | **மொத்தம்** | **8** |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 3456/2022/எப்1)

**தீர்மானம் எண்.352 – அ.கு. 1 மற்றும் 2 க்கு மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டது.**

பொருள் எண் :27

இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களுக்கான குத்தகை காலம் 14.02.2023 அன்று முடிய உள்ளதால் அரசாணை நிலல எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 19.09.2008-ன்படி கீழ்வரும் இனங்களுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | குத்தகை காலம் |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1. | நகராட்சிக்கு சொந்தமான பெரியகுப்பம் சைக்கிள் ஸ்டேண்டில் விடப்படும் இருசக்கர வாகனங்களுக்கு கட்டணம் தண்டும் உரிமை. | 15.02.2020 முதல் 14.02.2023 வரை |
| 2. | நகராட்சி ஆடடி சாலையில் அறுக்கப்படும் ஆடுகளுக்கு கட்டணம் தண்டும் உரிமை. | 15.02.2020 முதல் 14.02.2023 வரை |
| 3. | ஆடடி சாலையில் விழும் உதிரத்தினை எடுத்துப்போகும் உரிமை. | 15.02.2020 முதல் 14.02.2023 வரை |
| 4. | திருவிக பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம். | 15.02.2020 முதல் 14.02.2023 வரை. |
| 5. | பெரியகுப்பம் பேருந்து நிலைய கட்டண | 15.02.2020 முதல் 14.02.2023 வரை. |

| | | |
|---|---|---|
| | கழிப்பிடம். | |
| 6. | கிழக்கு குளக்கரை கட்டண கழிப்பிடம். | 15.02.2020 முதல் 14.02.2023 வரை. |

மேலும், மேற்படி இனங்களுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பத்திரிக்கையில் விளம்பரம் செய்வதற்கான விளம்பர செலவினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், 14.02.2023 வரைக்கும் மேற்படி இனங்களின் குத்தகைதாரர்களாக இருந்து தொகை செலுத்தாத நிலுவைதாரர்களை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்காமல் கருப்பு பட்டியலில் சேர்க்கவும், ஏல நடவடிக்கைக்கு பின், அன்னார்களது பெயர் மற்றும் நிலுவை தொகையினை மன்றத்தின் பார்வைக்கு பொருளாக வைக்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.2466 /2015/அ3)

**தீர்மானம் எண்.353 – அ.கு. மன்றத்தில் அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்:28**

இந்நகராட்சிக்கு சொந்தமான பெரியகுப்பம் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள 18 புதிய கடைகளில் கடை எண்.07ஐ திரு.R.லோகேஷ் என்பவருக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.314, நாள்.18.05.2018 மற்றும் அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள்.03.07.2007–ன்படி கீழ்கண்ட விவரப்படி குத்தகை வைப்புத் தொகைகள் பெறப்பட்டு, 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகை உரிமம் வழங்கப்பட்டது.

மேற்படி வழங்கப்பட்ட குத்தகை காலம் முடிவடைந்த நிலையில் ஏற்கனவே உள்ள வாடகை தொகையில் 15% உயர்வு செய்து மேலும் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து நடத்திட காலநீட்டிப்பு செய்து தருமாறு சம்மதம் தெரிவித்து கடிதம் சமர்பிக்கப்பட்டுள்ளது. எனவே கீழ்காணும் கடையின் குத்தகைதாரருக்கு 01.04.2021 முதல் 31..03.2024 வரை குத்தகை உரிமத்தினை காலநீட்டிப்பு செய்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | கடை எண் | குத்தகைதாரர் பெயர் | 01.04.2018 முதல் 31.03.2021 வரை மாத வாடகை தொகை | 15% உயர்வு செய்யப்பட்ட வாடகை தொகை (01.04.2021 முதல் 31.03.2024 வரை) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | பெரியகுப்பம் 18 புதிய கடைகளில் கடை எண்.07 | திரு. R.லோகேஷ் | ரூ.6.000,/– | ரூ.6,900/– |

**அலுவலக குறிப்பு :-**

மேற்கண்ட கடைகளுக்கு கலம் எண்.5–ல் உள்ளவாறு ஏற்கனவே உள்ள மாத வாடகையில் 15% உயர்வு செய்து 01.04.2021 முதல் 31.03.2024 வரை உரிமம் நீட்டித்து வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.0464/2015/அ3)

**தீர்மானம் எண்.354 – அ.கு. மன்றத்தில் அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்:29**

திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட ஸ்ரீ நிக்கேதன் பள்ளி எதிரில் அமைந்துள்ள பத்மாவதி நகர் பூங்காவில் தங்களுடைய சொந்த செலவில் மரக்கன்றுகள் நட்டு பராமரிக்க “வாகை” Charitable Trust குழு தலைவர் திரு.சி.சண்முகம் என்பவர் கடிதம் அளித்துள்ளார்.

எனவே, பூங்காவில் மரக்கன்று நட்டு பராமரிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.3513/2022/எப்1)

**தீர்மானம் எண்.355 – அ.கு. மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்:30**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.22–ல் பெரியகுப்பம் இரயில் நிலையம் அருகில் இரு சக்கர வாகனம் நிறுத்த கட்டமைப்பு பணிகளை ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசு திட்ட நிதியில் நிதி ஒதுக்கீடு செய்ய கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. அரசு திட்ட நிதியில் ஒதுக்கீடு செய்ய கோரி அரசுக்கு பிரேரணை அனுப்ப மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண்.3490/2022/இ1)

**தீர்மானம் எண்.356** – **அ.கு. அரசு திட்ட நிதியில் நிதி ஒதுக்கீடு செய்யக் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பிரேரணை அனுப்பலாம். அரசிடமிருந்து நிதி பெறாத நிலையில் இந்நகராட்சியின் பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தில் அனுமதி வழங்கப்படுகிறது.**

இடம் : திருவள்ளூர் — நகர்மன்ற தலைவர்,

நாள்: 12.01.2023 — திருவள்ளூர் நகராட்சி.